பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 11 உ  செவ்வாய்க்கிழமை  (25 6-1991)  UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 202

# சமஷ்டி அரசமைப்புக்கு சுதந்திரக்கட்சி ஆதரவு?

## தீர்வுக்கு திட்டவட்டமான யோசனையை அரசு தர வேண்டும் என்றும் வலியுறுத்து

அம்ஸ்ரடாம், ஜூன் 25

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கக் கூடியதான சமஷ்டி (Federal) அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கு இணக்கம் தெரிவிக்கும் நிலைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வந்துள்ளது.

இப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு திட்டவட்டமான யோசனைகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் சுதந்திரக்கட்சி அறிவித்திருக்கிறது.

நெதர்லாந்து வானொலி நேற்று ஒலிபரப்பிய — நிற்றா செபஸ்தியனின் — அரசியல் விமரிசனத்தில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த விமரிசனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

கடந்த மார்ச் 2ஆம் திகதி பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதும், ஜூன் 21 இல் கொழும்பு இராணுவத்

(3ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப...... இப்பதான் நீலச் சட்டைக்காரருக்கும் ஞானம் பிறந்திருக்குது போலை......!

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஜூன் 25

மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுமாலை 6 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெயலலிதா பதவி ஏற்றார்

சென்னை, ஜூன் 25

தமிழ்நாட்டின் 11 ஆவது முதலமைச்சராக அ. தி. மு. க. பொதுச் செயலாளரான செல்வி ஜெயலலிதா நேற்றுப் பதவி ஏற்றார்.

மாநில ஆளுநர் பீஷ்மன் நாராயண சிங், முதலமைச்சருக்கும் அவரது அமைச்சர்களுக்கும் பதவிப்பிரமாணமும் இரகசியக்காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

அமைச்சர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சுகளும் வருமாறு;

முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா— பொலிஸ், இந்து அறநிலையத்துறை, மதுவிலக்கு, பொதுத்துறை, பொதுநிர்வாகம், தொழில், வர்த்தகவரி, தகவல் — விளம்பரம், சுரங்கம், கனிமத்துறை.

இரா. நெடுஞ்செழியன் — நிதி

கே. ஏ. கிருஷ்ணசாமி — சட்டம்

எஸ். டி. சோமசுந்தரம் —

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முகாமிலிருந்து தாக்குதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை சுமார் 2 மணிமுதல் சுட்டுவன் பகுதியை நோக்கி ஷெல், துப்பாக்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன.

இச்சம்பவத்தில் அளவெட்டி செட்டிபுலத்தைச் சேர்ந்த பி. அருந்தவநாதன் (வயது 33) என்பவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தார். (இ-15)

## தாக்கப்பட்ட படகிலிருந்த மற்றும் ஒருவர் தப்பினார்

குருநகர், ஜூன் 25

பாலைதீவுக்கு அப்பால் ஸ்ரீலங்கா கடற்படையின் தாக்குதலின் போது சேதம் அடைந்த படகிலிருந்து கடலுக்குள் பாய்ந்த மற்றும் ஒரு மீனவரும் கரை சேர்ந்துள்ளார்.

குருநகர் றெக்ளமேஷன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த ந்தியாஸ் பிரேவிஸ் (சின்னவன்) என்பவரே கரை சேர்ந்த இரண்டாவது நபர் ஆவார்.

பண்டா என்பவர் ஏற்கனவே கரை சேர்ந்தது தெரிந்ததே.

இன்னும் ஒருவர் நெடுந்தீவுக் கரையை அடைந்துள்ளாராகவும், தாக்குதல் நடைபெற்ற சமயம் இயந்திரப் படகில் நித்திரையாகி இருந்த மற்றும் ஒருவர் பற்றி இன்னும் தகவல் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51).

## கம்யூ. கட்சியின் ஆதரவை காங்கிரஸ் கோருகிறது

புதுடில்லி, ஜூன் 25

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவை இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் நாடியிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இத்தகவலை மேற்கு வங்காள முதலமைச்சரும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான ஜோதிபாசு வெளியிட்டார். ஆனால் இது தொடர்பான மேலதிக விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார். (உ-எ)

# அடுத்த குண்டு எங்கே வெடிக்கும்?

# கொழும்பு நகர் எங்கும் கலக்கம்!

அடுத்த குண்டு எங்கே, எப்போது வெடிக்கும்?

இவ்வாறு கொழும்பு கலங்கிப் போயிருக்கிறது. பொது மக்கள் மட்டுமல்ல— பாதுகாப்புப் படையினர், அரசாங்க உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் எல்லோருமே கதி கலங்கி நிற்கிறார்கள்— என்று பி. பி. ஸி. வானொலி தனது விமர்சனம் ஒன்றில் தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை, கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் நடந்த குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து, கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

ஆயுதப் படையினர் மூலை முடுக்குகளில் எல்லாம் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இரகசியப் பொலீஸாரும் தாராளமாக நடமாடுகிறார்கள்.

இவர்கள் எதைச் செய்தால் என்ன, மற்றொரு தற்கொலைப் படைத் தாக்குதல் இடம்பெறாமல் தடுக்கக் கூடிய சக்தி இவர்களுக்கு இருக்கிறதா என்பதில் எல்லோருக்குமே சந்தேகம் உள்ளது.

இப்போது கொழும்பில் திடீர் திடீர் சோதனைகள் நடக்கின்றன. தங்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வெடி மருந்துப் பொருள்கள் மற்றும் ஆயுதங்களை வைத்திருக்கக்கூடியவர்களையும், பதுக்கல் ஒளிவிடங்களையும் தேடிப் பிடிப்பதிலும் பாதுகாப்புப் படையினர் தீவிரமாகச் [illegible]

இவர்களால் எதிர்காலத்தில் நிகழக்கூடிய குண்டு வெடிப்புகளைத் தடுத்து நிறுத்த முடியுமா என்பது ஒருபுறமிருக்க —

கொழும்பில் நடத்திய குண்டு வெடிப்பின் மூலம் விடுதலைப் புலிகள் உலகத்திலேயே சக்தி மிக்க போராளிகள் இயக்கம் என்பதை நிலைநாட்டியிருப்பதாக வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் தெரிவித்தார் — என்று பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (அ-3)

## பல்கலை. மாணவர்கள் நேற்று நகரில் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 25

கிழக்கில் தமிழ் மக்கள் மீது படையினர் மிகப்பெரிய அளவில் மேற்கொண்டுவரும் படுகொலைகளைக் கண்டித்தும்—

யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீட மாணவனான ஜோசப் ஜெயசீலன் என்பவர் கடந்த 8 ஆம் திகதி அனுராதபுரத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நேற்றுப் பேரணி ஒன்றை நடத்தியது.

நேற்று நண்பகல் 11 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமான இப் பேரணியில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர்.

பேரணி யாழ். செயலகத்தை அடைந்ததும் அங்கு வைத்து மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாத

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீண்டும் மந்திகைக்கு பிரெஞ்சு மருத்துவர்கள்

பிரெஞ்சு மருத்துவக் குழுவைச் சேர்ந்த டாக்டர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் மீண்டும் தமது சேவையை ஆரம்பிப்பதற்காக இவ்வாரத்தில் யாழ் வந்து சேருவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவைச் சேர்ந்த டாக்டர்கள் மடு அகதி முகாமுக்கும் இவ்வாரத்தில் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிகளில் மீண்டும் தமது சேவையைத் தொடங்க இக்குழுவின் பிரதிநிதிகள் ஏற்கனவே சென்று விட்டதாகவும் தெரியவந்தது.

இக்குழுவின் பிரதிநிதிகள் வந்த வாகனம் ஒன்றின் மீது வவுனியா தாண்டிக்குளத்தில் வைத்து ஸ்ரீலங்கா விமானப் படை ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து—

வடக்கு, கிழக்கில் பணிபுரிந்து வந்த தமது பிரதிநிதிகளை பிரெஞ்சு மருத்துவக் குழு முற்றாக வாபஸ் பெற்றுக் கொண்டது என்பது தெரிந்ததே. (உ)

## மன்னார்தீவில் படை குவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 25

மன்னார் தீவில் கடந்த 19 ஆம் திகதி முதல் பெரும் எண்ணிக்கையில் படையினர் குவிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

எழுதத்தூர், தாராபுரம், புல்காலவாடி, ஓலைத்தொடுவாய்சந்தி, கதிவத்தல், சிறுத்தோப்பு, கட்டாஸ்பத்திரி, புள்ளிக்குடியிருப்பு, நடுக்குடாச்சந்தை, நடுக்குடாக் கிராமம், நடுக்குடாக் கடற்கரை, தவிப்பார் ஆகிய இடங்களில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

தாழ்வுப்பாடு, 5 ஆம் கட்டை, எருக்கலம்பிட்டி, பேசாலை, மன்னார் நகரம் ஆகிய ஐந்து இடங்களில் படையினர் ஏற்கனவே நிலைகொண்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ-3)

## ராஜீவ் கொலைச் சம்பவம்; சந்தேக நபர்கள் தப்பினர்?

சென்னை, ஜூன் 25

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தேடப்பட்டு வரும் இரண்டு இலங்கையர்களும் இந்தியாவை விட்டு வெளியேறியிருக்கக் கூடும் என்று இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெரும் தேடுதல் நடவடிக்கையில் சிக்காது அந்த ஆணும் பெண்ணும் எப்படித் தப்பிச் சென்றனர் என்பது தமக்கு பெரும் வியப்பைத் தந்திருப்பதாக இந்தியப் புலனாய்வுத் துறையில் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை ராஜீவ் கொலைச் சம்பவத்தில் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு தொடர்பு இருப்பதாகவும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட நாட்டு அதிகாரிகளுடன் இந்தியா தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான ஆணும் பெண்ணும் ஐரோப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வல்லை மீது பீரங்கித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 25

வல்வெட்டித்துறைப் பகுதி மீது நேற்று முன்தினம் இரவு பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரவு 10 மணி முதல் 11 மணி வரை கடலில் இருந்து வல்வெட்டித்துறைக் கரையை நோக்கி ஏவப்பட்ட பீரங்கி ஷெல்கள், வல்வை முத்துமாரி அம்மன் கோவிலடி, உதய சூரியன் விளையாட்டரங்கு, சக்கோட்டை மற்றும் ஊறணி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் பலாலி, காங்கேசன் பகுதிகளிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வல்லைவெளி, கரணவாய்ப் பகுதிகளில் விழுந்து வெடித்ததாகவும் தெரியவருகிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

நல்ல நிலையில் உள்ள Baby Walker தேவை. தொடர்பு: கொள்க; 32, பிரப்பம் குளம் வீதி, யாழ்ப்பாணம்.
(17327)

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 39/17, மின் சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
[சி/0170]

### மணமகள் தேவை

23 வயது நிரம்பிய U.Kயில் வசதியுடன் தொழில் புரியும் மணமகனுக்கு நல்ல குடும்ப மணமகள் தேவை. வந்து விவாகம் செய்வார். தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட் ஆனைப்பந்தி.
(17316)

### இலவச அக்குபஞ்சர் சேவை

பல்கலைக்கழக விரிவுரையாளரால் இலவச அக்குபஞ்சர் சிகிச்சை அளிக்கப்படும். திங்கள், புதன், வெள்ளி காலை 9-12 மணிவரை 101 - (33) பலாலி வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணத்தில், ஏனைய நாட்களில் நவீன வைத்தியசாலை உடுவிலில்.
(17320)

### தவறிவிட்டது

திருமதி J. இராசநாதன் பெயரில் சாவகச்சேரி இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட C 33 597966 d/d இலக்கமுள்ள நிலையான வைப்புச் சான்றிதழ் (Fixed Deposit Certificate) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி நீதிமன்றம் முன்பாகவுள்ள J. S. T. ஸ்ரேஷனறி புத்தகக் கடையில் கொடுத்து உதவவும்.
(4167)

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள் "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை.
(4163)

### வைத்தியம்

செங்கண்மாரி, குட்டநோய், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(4170)

## இவரைத் தெரியுமா?



சாவலில் இருந்து கைதி ஒருவர் தப்பி ஓடியதாகச் சில வாரங்களுக்குமுன் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

"புளொட் சிறி" என அழைக்கப்படும் அந்தத் தப்பி ஓடிய கைதி இவர்தான்.

இவரைப் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் அருகில்உள்ள எங்கள் பிரதேச அலுவலங்களின் ஊடாக, கோண்டாவில் தலைமைச் செயலகத்திற்குத் தகவல்தருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.
(ச-105)

தமிழீழ விடுதலைப் புலிகள்

## நிருரீயூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

### புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை - 3 ஆவது

5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான மேற்படி 3 வது பரீட்சை 30 - 06 - 91 ஞாயிறு பி. ப. 2- 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

விவரங்களுக்கு:
நிர்வாகி.

(0176)

## கண்ணீர் அஞ்சலி

நேற்று [திங்கட்கிழமை] சிதபதமடைந்த வட இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாகச் செயலாளர் திரு. சிவரட்னம் சர்வானந்தன் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

வட இலங்கைச் சங்கீத சபை,
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

## புதுவைக்கு புதிய முதல்வர்

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச முதலமைச்சராக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு வி. வைத்திலிங்கம் பதவியேற்க இருக்கிறார்.

இந்திரா காங்கிரஸ் சட்டசபைக்குழு கடந்த சனிக்கிழமை இரவு கூடி, திரு. வைத்திலிங்கத்தைத் தெரிவு செய்தது.
(இ-எ)

# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய

## தேர்த்திருவிழா சிறப்பு மலர்

### தேருரு' தேவியின் 'தேருக்கு வ'பது ஐ'பது!



இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன் அடியார்கள் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக, முதன்முதலில் உள்ளூர்ச் சிற்பாசாரியான திருநெல்வேலி ஆறுமுகம் என்பார் தலைமையில் 1941 ஆம் ஆண்டு இச் சித்திரத்தேர் ஆகம விதிகளுக்கமைய உருவாக்கப்பெற்றது. உள்ளூர்க் கலைஞர்களின் கைவண்ணத்தைப் பார்ப்பதற்கு அப்போதைய நாட்டின் தேசாதிபதி சேர் அண்ட்று கல்டிகொட் அவர்கள், உள்நாட்டு மந்திரியார் சேர் அருணாசலம் மகாதேவா அவர்கள் வழி காட்ட இங்கே வந்து தேரைப் பார்த்துச் சிற்பாசாரியர்களைப் பாராட்டிச் சான்றிதழ்கள் வழங்கிப்போன சரித்திரமும் உண்டு.

அழகிய தேர் செய்த ஆறுமுகம் அவர்களின் அந்தரங்க பக்திக்கு அசைந்த அம்பிகை ஒருநாளிரவு அவர் கனவில் தோன்றி ஐந்து ரூபா சன்மானம் கொடுத்தருளியதும் உண்டு.

பொன் விழாக் காணும் இத்தகு சிறப்புப் பெற்ற

**தேவியின் தேர்த்திருவிழா இன்று 25 - 06 - 1991**

**காலை 7-00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகிறது.**

மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி ஆலயத்துக்கு சிறப்பியல்புகள் காட்டும் சரித்திரமும் உண்டு.

இன்று இளம் தொண்டர்களின் முயற்சியாலும், பெரியோர்களின் வழி நடத்தலினாலும் 1986 முதல் பரிபாலன சபையால் ஆலயம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
எனவே
இளம் தலை முறையினர்
அம்பிகைக்கு தொண்டாற்றி
அருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!



### இச் சிறப்பு மலர்

அம்பிகையின் அருள்வேண்டி, ஆலய வளர்ச்சியில் அயராது பாடுபடும் இளம் தொண்டர்களினால், சில அன்பர்களின் உதவியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

[17331]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விசித்திரப் பேச்சு

கம்புறுப்பிட்டி கிராம எழுச்சி வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி பிரேமதாசா, வழமை போலத் தமது பழைய பல்லவியைப் பாடியிருக்கிறார்! வடக்கு - கிழக்கு நெருக்கடியை, அதாவது தமிழர் பிரச்சினையை, சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்!!

இப்படி அவர் முன்னரும் பல தடவைகள் கூறியதுண்டு. எனவே அதனை விடுத்து—

ஜனாதிபதியின் கம்புறுப்பிட்டிப் பேச்சில் விசித்திரமான ஓர் அம்சம் உண்டு. அதுவே இவ்வேளை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

வடக்கு - கிழக்கு நெருக்கடி தேசியப் பிரச்சினையாக மாறிவிட்டதாக ஜனாதிபதி இப்போது தான் கருதுகிறார்! கண்டு பிடித்திருக்கிறார்! இதுவரையும் அவர் தமிழர் பிரச்சினையை வடக்கு-கிழக்கு நெருக்கடியாகவே கருதியிருக்கிறார் போலும்!! வடக்கு-கிழக்கில் வாழும் மக்களே பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதால் அவர் அவ்வாறு எண்ணிவிட்டாரோ?

கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர், "போராட்டம் இப்போது கொழும்புக்கும் வந்துவிட்டது" என்று கடந்த வாரம் குறிப்பிட்டார். கொழும்பில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே பிரஸ்தாப பத்திரிகையாளர் முன்கண்ட குறிப்பைத் தெரிவித்திருந்தார்.

அவர் கூறியது சரிதான் என்பதை நாட்டின் ஜனாதிபதியே ஒப்புக் கொண்டு விட்டார்! கடந்த ஒரு வருட காலமாக வடக்கு—கிழக்கில் தான் மக்கள் நெருக்கடிக்குள், யுத்தப் புலத்தில் வாழ்கிறார்கள். அதனால் தமிழர் பிரச்சினை வடக்கு — கிழக்கிற்கு உட்பட்டதே என்றும், தேசியப் பிரச்சினை அல்லவென்றும் ஜனாதிபதி நினைத்திருக்கிறார் போலும்!

ஒரு யுத்தத்தைப் பிரகடனம் செய்து நடத்துமளவுக்கு வளர்ந்த தமிழர் பிரச்சினையை அரச தலைவர் தேசியப் பிரச்சினையாகக் கருதவில்லையென்றால்......?

மார்ச் மாதத்தில் ரஞ்சனைக் கொன்ற குண்டுவெடிப்பின் பின்னரும், கடந்த வாரக் குண்டு வெடிப்பின் பின்னரும் தான் நெருக்கடியும், பிரச்சினையும், தேசிய நெருக்கடியாகவும், தேசியப் பிரச்சினையாகவும் விஸ்தரித்துள்ளதாக நாட்டின் தலைவருக்குத் தெரிகிறது போலும்!

இந்த வகையில், வடக்கு—கிழக்குக்கு அப்பால் நெருக்கடி அதிகரித்தால் தான் அரசுத் தலைவர் பிரச்சினையைத் தீர்க்க மனங்கொள்வார் போலத் தெரிகிறது. அதாவது தமிழர்களின் உரிமைப் போராட்டம் தமிழ்ப் பிரதேசத்தின் எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அடிக்கடி கூறுவது எவ்வளவு பொருத்தமானதாகத் தெரிகிறது பார்த்தீர்களா?

கடந்த சுமார் ஐம்பது வருடங்களாகத் தீர்க்கப்படாமல் நீடித்து வரும் தமிழர் உரிமைப் பிரச்சினை, இப்போதைய நெருக்கடி காரணமாகத் தான் தேசியப் பிரச்சினையாக மாறி உள்ளதாகக் கூறுவது எவ்வளவு பொருத்தமற்றது? தலையில் பாரம் ஏறினால் தான் சுமையின் தன்மை புரியும் என்பதாலா இந்த விசித்திரமான, அர்த்தமில்லாத பேச்சு?

## வீமன்காமத்தில் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 25

பலாலி முகாம் பகுதியிலிருந்து வீமன்காமத்தை நோக்கி நேற்று அதிகாலை 1.30 முதல் 3.30 மணிவரை கடும் ஷெல் தாக்குதலும், கலிபர் தாக்குதலும், மேற்கொள்ளப்பட்டன. ஐம்பதுக்கும் மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## படையினரின் மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

வவுனியா செட்டிகுளம் பகுதி கல்லாற்றுப் பாலத்தின் பலகை இடைவெளியில் மறைத்து வைத்திருந்த மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தமது வலது காலை முழங்காலுடன் இழந்தார்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் செட்டிகுளம் மினிபாம் பகுதியைச் சேர்ந்த அந்தோனி இராசேந்திரம் (வயது 30) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காலை இழந்தார்.

கடந்த வாரம் இப்பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் இந்த மிதிவெடியை வைத்துச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (உ-15-3)

## மோதல

யாழ்ப்பாணம், ஜூன் 25

வவுனியா புதிய வீதிச்சந்தியில் முகாமிட்டுள்ள படையினர் நேற்றுக் காலை 7 மணியளவில் வெளியேற முற்பட்ட போது அவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று தெரியவருகிறது.

சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. (உ-3)

## படையினர் சூடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு பொன்னாலைப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (உ-15)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மணலாறு மண்கிண்டியில் முகாமிட்டுள்ள படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான சோழன் (ப. ராஜராஜன் தனபாலசுப்பிரமணியம் — கோப்பாய் வடக்கு) வீரமரணமடைந்தார். (உ-3)

## ஜெயலலிதாவுக்கு இவர்களும் பாராட்டு

கொழும்பு, ஜூன் 25

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.டி.பி. ஆகியன தங்கள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளன. (இ-எ)

## வங்கியுடன் தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஜூன் மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக சகல அரசாங்க கூட்டுத்தாபன அதிகாரிகளும் இலங்கை வங்கி யாழ்ப்பாண முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

## ராஜீவ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாவில் இனந்தெரியாத நபர்களுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று புலனாய்வுகள் தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறினர். (உ-எ)

# பல்கலை. மாணவர்கள் மீது ஸ்ரீலங்காப்படை கெடுபிடி!

## மாணவர் அவை ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மாணவர்கள்மீது படையினரால் நடத்தப்படும் வன்முறைகள் குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவரவை ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசவுக்கு யாழ். அரசாங்க அதிபர் ஊடாக மகஜர் அனுப்பி உள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும், சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மகஜர் விபரம் வருமாறு:-

கடந்த வருடம் ஜூன் மாதம் முதல் இன்றுவரை எமது தமிழ்ப் பிரதேசங்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பு நடவடிக்கைகளின் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதையிட்டும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது வீடு வாசல்சொத்துக்களை இழந்து அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளதையிட்டும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் பெரும் கவலை கொள்கின்றோம்.

அத்துடன் இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கடந்தவாரம் கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற இனப்படுகொலை அமைந்தது. இதனையிட்டு நாம் பெரும் துயரடைகின்றோம்.

மேலும் ஏதும் அறியாத ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதுகூட அறியமுடியாத நிலையில் தடுத்து வைக்கப்படுவதை எண்ணி நாம் பெரும் அச்சமடைகின்றோம்.

இந்த வரிசையில் எமது பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவனாகிய ஜெயசீலன் என்பவர் கடந்த 08 - 06 - 1991 அன்று வவுனியாவில் வைத்து முஸ்லிம் காடையர்களினாலும் விசேஷ அதிரடிப்படையினராலும் கைதுசெய்யப்பட்டார். அவரைப்பற்றிஎந்தவித தகவலும் அறியமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம். எனவே அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்: அல்லது அவரைப்பற்றிய தகவலை உடனே எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன்கடந்த ஒரு வருடகால இராணுவ நடவடிக்கையினால் எமது பல்கலைக்கழக மாணவர்களாகிய திருகோணமலை கட்டைப்பறிச்சானைச் சேர்ந்த அருமைநாயகம், அக்கரைப்பற்றைச் சேர்ந்த கிருபாகரன், மட்டக்களப்பு துறை நீலாவணையைச் சேர்ந்த தயாளன், யாழ்ப்பாணம் தீவுப்பகுதியைச் சேர்ந்த யோசப் ஜெயராஜ் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் வவுனியா தடை முகாமை தாண்டும் வேளையில் முகுந்தன் என்ற இறுதி ஆண்டு மாணவன் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலை அடைந்தார் என்பதையும் அறியத்தருகின்றோம். இது மட்டுமல்லாது தீவுப்பகுதி, பலாலிப்பகுதி, காரைநகர், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களபபு, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் நூற்றுக் கணக்கான எமது மாணவர்கள் தமது படிப்பைத் தொடர முடியாது வசதியற்ற நிலையில் உள்ளார்கள்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் தொடரும்இராணுவ நடவடிக்கைகளாலும் அதிகரிக்கும் இராணுவ முகாம்களின் எண்ணிக்கைகளாலும் மேலும் பலர் அகதிகளாக்கப்படுகின்றனர். அத்துடன் எமது தமிழ்ச் சகோதரிகள் முஸ்லிம் காடையர்களினாலும் இராணுவத்தினராலும் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இச் சம்பவங்களை எல்லாம் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவற்றை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இதன் மூலம் எமது பிரதேசத்தின் யதார்த்த நிலையினை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு வெளிக்கொண்டு வர விரும்புகின்றோம்.

—இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஜெயலலிதா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவாய்த்துறை

ஆர். எம். வீரப்பன் — கல்வி

கே. ராஜாராம் — உணவு, கூட்டுறவு

அரங்கநாயகம் — தொழிலாளர் நலன்

முத்துசாமி — மக்கள் நல்வாழ்வு

செங்கோட்டையன் — போக்குவரத்து

மதுசூதனன் — கைத்தறி

கண்ணப்பன் — பொதுப் பணித்துறை

அழகு திருநாவுக்கரசு — ஊரகமற்றும்நகரவளம்

கு. பா. கிருஷ்ணன் — விவசாயம்

செல்லகணபதி — வீட்டு வசதி

முகமது ஆஸிப் — ஊரகத் தொழிற்துறை

திருமதி இந்திரகுமாரி — சமூகநலன்

ஆனந்தன் — ஆதிதிராவிட நலன்

ஜெயக்குமார் — கால்நடை (இ-எ)

## வெள்ளைப் பிரம்பு வைபவம்

தென்மராட்சி, ஜூன் 25

விழிப்புலன் இழந்தோருக்கு வெள்ளைப் பிரம்பு அளிக்கும் வைபவம் அறவழிப் போராட்டக் குழுவின் தலைமைப் பணிமனையில் அண்மையில் நடைபெற்றது. [த-31]

# உதவும் நாடுகளின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது ஏன்?

## நிதி அமைச்சு செயலர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 25

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது தொடர்பாக எழுந்த ஊகங்கள் தவறானவை. இப்படி நிதி அமைச்சுச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் இவ்வாண்டு அக்டோபரில் பாரிஸில் நடைபெறவிருந்தது.

இப்போது அந்தக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு செப்டம்பரில் வாஷிங்டனில் நடைபெறவிருந்த சர்வதேச நாணயச் சபை மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டமையே இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகளின் பாரிஸ் கூட்டமும் ஒத்தி வைக்கப்பட்டதற்கான காரணமாகும்.

இப்படி நிதி அமைச்சுச் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் மேலும் தெரிவித்தார். (இ-எ)

## சமஷ்டி அரசமைப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகம் தற்கொலைப் படையின் தாக்குதலுக்கு இலக்கானதும் அமைதிப் பேச்சுகள் அவசரமாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

தங்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைக் கைவிடும்படி, இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதே விடுதலைப் புலிகளின் நோக்கம் என்றும் பொதுவாக கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் இச் சவாலை எதிர்வரும் வாரங்களில் இலங்கை அரசு எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

கடந்தவாரம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் வடக்கு - கிழக்கு நெருக்கடி தொடர்பாக திடீர் திருப்பம் ஒன்று ஏற்பட்டது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு [illegible] யோசனைகளைத் தெரிவிக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சி அறிவித்ததே அத்திருப்பமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கக்கூடியதான சமஷ்டி (Federal) அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கு சம்மதிக்கும் அளவுக்கு சுதந்திரக்கட்சி முன்வந்து உள்ளது.

வடக்கு - கிழக்கு நெருக்கடி திடீரென இன்று தேசியப் பிரச்சினையாகிவிட்டது.

சமஷ்டி அரசமைப்பு முறையை பலமாக எதிர்த்து வந்த இலங்கை அரசாங்கம், இப்போது சுவிட்சர்லாந்து மற்றும் செக்கோஸ்லேவேகியா ஆகிய நாடுகளில் உள்ள அரசமைப்பு முறையை இலங்கையிலும் கொண்டு வருவது பற்றி தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## மடுவுக்கு உணவு

யாழ்ப்பாணம், ஜூன் 25

மடு அகதி முகாமுக்கு 13 லொறிகளில் உணவுப் பொருள்களை இன்று எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

மடு முகாமுக்கு கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்கள் கடந்த இரு வாரங்களாக அநுராதபுரத்தில் தேங்கிக் கிடந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வீரமாகாளி தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 25

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை எட்டு மணிக்கு இடம்பெறும். அம்பாள் பொன் விழாக் காணும் தேரில் பவனிவந்து அடியார்களுக்கு அருட்காட்சி தருவார்.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நிகழும். மாலை 4 மணிவரை அம்பாள் தேரில் விற்றிருந்து அருள் சொரிவார். (அ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 25

வட்டுக்கோட்டை துறட்டிப் பனையடி அம்மன் கோவில் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும் (த)

## 56 படையினர் வவுனியாவில் உயிரிழப்பு!

புதுடில்லி, ஜூன் 25

கடந்த பத்து நாட்களாக வவுனியாவில் இடம்பெற்ற மோதல்களில் 56 படையினர் உயிரிழந்ததாக ஸ்ரீலங்காவின் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது- (உ-3)

## ராஜதந்திரிக்கு ரூ. 9½ கோடி அபராதம்

கொழும்பு, ஜூன் 25

தங்கம் கடத்தியதாகக் கூறப்படும் ராஜதந்திரி ஒருவரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பிடித்தனர்.

அவருக்கு ஒன்பது கோடி 50 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## பாரதிய ஜனதா எதிர்க்கும்

புதுடில்லி, ஜூன் 23

இந்திராகாங்கிரஸ் கொண்டு வரும் நம்பிக்கை கோரும் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என்று பாரதிய ஜனதாக் கட்சி தீர்மானித்துள்ளது.

## எங்கள் குறை கேளுமம்மா!

நிலையான நாடும் அறம் நிலைக்கின்ற நல்லசுரம்
நிறைவான மக்கள் வாழ்வும்
நித்தமுயர் கலைநலமும் மெத்தவரு மண்வளமும்
நீடு புகழ் பண்பு சால்பும்
குலையாத கல்வியும் குன்றாத பெருமையும்
குறையாத வீர மாண்பும்
கொள்கைவிழி பஞ்சமா பாதகமும் செய்யாத
குணமான மரபும் ஓங்க
அலையாழி சூழ்நயினை நாகம்மை அன்னைநின்
அருளான பெருங் கருணையால்
அடியார்கள் புடைசூழ தேரூர்ந்து எம்மை நீ
ஆசீர் வதித் தருளுவாய்
எமையாளும் அம்மையே! ஈடில்லாத் தாய்மையே!
எங்கள் குறை கேளுமம்மா
எத்தடை வருகிலும் சித்தம்நீ வைத்தெமை
என்றுமே காரும் அம்மா!

— முருகனடியான்

(நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா இன்றாகும். அதனை யொட்டி இக் கவிதை பிரசுரமாகிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

### வேலாயுதம் ஜெயகாந்தன்

மலர்வு: 23 - 08 - 1971
உதிர்வு: 28 - 03 - 1991

எங்கள் அன்புச் செல்வமே - கண்ணே!
உன் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்கா, தம்பி,
உறவினர்.

பன்னாலை,
தெல்லிப்பளை.
[17118]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 — 05 — 1962
மறைவு: 07 — 07 — 1990

### அமரர் இராசா ஸ்ரீ பிரபாகரன்

எம் உயிரினும் மேலான செல்வமே!
உமது ஆன்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

உமது உயிருக்குயிரான:
மனைவி, தாய், சகோதரன்,
உறவினர்கள்.

64/3, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[17337]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன்
### சிவபாதசுந்தரம் கலாதீபன்

படைப்பு: 16 - 12 - 1966
அழிப்பு: 28 - 06 - 1983

திதி: 25 - 06 - 1991

அன்பு மகனாய், பாசமுள்ள தம்பியாய் எம் இதயத்தில் உறவாடி மகிழ்ந்த எம் கலாதீபா! எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உன் பிரிவின் நினைவலைகள் எம் இதயத்தில் என்றென்றும் இழையோடும்.

உன் ஆத்ம சாந்திக்காக தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
பாசமிக்க அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, உற்றார், உறவினர், நண்பர்கள்.

'கலாதீபம்'
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
(சி 0142)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-06-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பல்கலை. மாணவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பின்னர் பேரணி யாழ். கச்சேரி வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தை சென்றடைந்தது. அங்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

தேற்றைய பேரணியில் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுலோகங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. (உ-5)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### பிரம்மஸ்ரீ பொ. கனகசபாபதிஐயர்

தோற்றம்: 6 - 10 - 1921
நிறைவு: 7 - 7 - 1990

திதி: 25 - 6 - 1991

பிரம்மஸ்ரீ பொ. கனகசபாபதி ஐயர் அவர்களின் முதல் ஆண்டு நினைவு கூறுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரன்,

28, பிரப்பங்குள வீதி,
யாழ்ப்பாணம்.
(17326)

## மரண அறிவித்தல்கள்

### சிவரெட்னம் சர்வானந்தன்

ஓய்வுபெற்ற கச்சேரி லிகிதரும், தற்போதைய வட இலங்கை சங்கீதசபை (கல்வித்திணைக்களம்) லிகிதருமான சிவரெட்னம் சர்வானந்தன் நேற்றுக் காலமானார்.

இவர் பூபதியின் அன்புக் கணவரும், தனராஜ் (கனடா), தமயந்தி (ஜேர்மனி), கருணாகரன் (இந்தியா), நளாயினி (யாழ் கல்லூரி), பகீரதன் (சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனும், ஆனந்தநடராசா (மலேசியா), தில்லைநாயகி, சோதிநாயகி (மலேசியா), செல்வநாயகி (மலேசியா), விவேகானந்தன் (மலேசியா) ஆகியோரின் அன்பு சகோதரனும், பாலசுப்பிரமணியத்தின் (ஜேர்மனி) மாமனாரும், நர்மதாவின் பேரனும், ரமணன், செந்திபவன், றாஜி, சுஜி, சுவர்ணா, ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(17119) நளாயினி சர்வானந்தன்

### திருமதி லூவீசம்மா ஜோனாஸ்

திருமதி லூவீசம்மா ஜோனாஸ் 24 - 06 - 91 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை ஜோனாஸ் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி றெஜினா இம்மானுவேல் (ஆசிரியை, சென் யோசப் மகாவித்தியாலயம்), திருமதி டோமினிக்கா வேதநாயகம். திருமதி மாகிறட் ஏபிரகாம் (புள்ளி விவர உத்தியோகஸ்தர், வவுனியா கச்சேரி), செல்வி டொமற்றில்டா ஜோனாஸ், திரு. பி. சே. வில்சன் ஜோனாஸ் (கணக்காய்வாளர், கிறின்லிஸ் வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்புத்தயாரும், திரு. அ. போ. இம்மானுவேல், காலஞ்சென்ற திரு. அ. வேதநாயகம். திரு. ஜெறாட் ஏபிரகாம், திருமதி றஜித்தா வில்சன் ஜோனாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுயானி, தயாளன், தஷ்னி, தர்மிலி, ஜெறிவினி, ஜெறிங்டன், சுபுலெ, றஜித் ஆகியோரின் அருமைப் பேத்தியாருமாவார். அன்னாரின் பூதவுடல் நாளை பிற்பகல் 3.30 மணியளவில் சில்லாலை முத்து இல்லத்தில் இருந்து புறப்பட்டு கதிரை மாதா ஆலயத்தில் இறுதி ஆராதனை நடைபெற்று, நல்லடக்கத்திற்காக சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி வேதநாயகம்,

முத்து இல்லம்
சில்லாலை.
(17120)

### வேலுப்பிள்ளை கந்தசாமி
(Retird Suptd. of Excise)

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூரில் வசிப்பவருமான வே. கந்தசாமி அவர்கள் [24-06-91] நேற்று சிவபதமடைந்தார்.

இவர் பத்மராணியின் அன்புக் கணவரும் விவேகானந்தா [நியூசிலாந்து], தயானந்தா [ஜேர்மனி]; அமலானந்தா [லண்டன்], யசோதரா [ஆசிரியை, நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்]. கருணானந்தா, (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தி, உஷா, பாலா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [25-06-91] இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10. 00 மணிக்கு பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

228/[illegible] வீதி, தகவல்:
நல்லூர். (17122) திருமதி ப. கந்தசாமி

## மரண அறிவித்தல்கள்

### திரு. வே. இராசையா
(இளைப்பாறிய உபதபாலதிபர் - நாச்சிமார் கோவிலடி)

திரு. வேலாயுதம் இராசையா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், கெங்காதரன் (பொறியியலாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம். காங்கேசன்துறை), ஸ்ரீதரன் (ஈழநாதம், ஆசிரியபீடம்) உமாராணி (சங்கீத ஆசிரியை, யா/கலட்டி மெ. மி. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மனோசாந்தா, சத்தியபாமா, ஆகியோரின் அன்பு மாமனாரும், டர்ஷணன், துஷிகா, நிதர்சன், குவலயா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 581/1, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(சி-0143) இராசையா ஸ்ரீதரன் (மகன்)

### கதிரவேலு கனகராஜா

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கதிரவேலு கனகராஜா 23-6-91 அன்று லண்டனில் காலமானார். அன்னார் வேதநாயகியின் அன்புக் கணவரும், கோபித்திலகன், சுகர்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. கதிரவேலு, திருமதி மகேஸ்வரியம்மா (லண்டன்) ஆகியோரின் அன்பு மகனும் செல்வராணி (கொழும்பு), சுந்தரஞானி (லண்டன்), லக்ஷுமிதேவி (லண்டன்), தனபூபதி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரவியரார்ஜா (லண்டன்), சிவநாதன் (பொறியிலாளர், லண்டன்), தயானந்தன் (பட்டயக்கணக்காளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), சுமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. திருமதி சிதம்பரநாதரின் (லண்டன்) அன்பு மருமகனும், ராஜ செல்வா (கொழும்பு), கார்த்திகா, தாரகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயிமயூரன், சாயிகல்யாணி, சாயிபானுமஞ்சரி (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் லண்டனில் 23-6-91 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

16/3, பழம்வீதி, தகவல்:
கந்தர்மடம், நா, தயானந்தன்
யாழ்ப்பாணம். (17324)

### மரியாம்பிள்ளை யோசவ்

சில்லாலையைச் சேர்ந்த திரு. மரியாம்பிள்ளை யோசவ் காலமானார்.

இவர், பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் பொது முகாமையாளர் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று 25 - 06 - 91 செவ்வாய்க்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு கதிரை மாதா சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
திரு. திருமதி ம. பஸ்ரியாம்பிள்ளை.

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (18724)

### அந்தோனிப்பிள்ளை திரேசம்மா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், இராமநாதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அந்தோனிப்பிள்ளை திரேசம்மா 23-06-1991 இல் காலமாகிவிட்டார். இவர் அந்தோனிப்பிள்ளையின் (Fire Brigade O. I. C.) அன்பு மனைவியும், இறப்பியேல்பிள்ளை செல்லம்மாவின் அன்பு மகளும், கிறிஸ்தோப்பர் அன்னம்மாவின் அருமை மருமகளும், அன்னம், றோசம்மா, மனுவேற்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவி, றாஜன் (பிரான்ஸ்), சாந்தி, வசந்தி, செலின் (தாதி பயிற்சிக் கல்லூரி), அன்ரு ஆகியோரின் அன்புத் தாயாரும், சங். சகோ. வின்சென்ற் (தி. கு. க. ம, மடு.), அ. நீ. குலேந்திரன் (தனியார் போக்குவரத்துப் பகுதி), ஜெயா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும், யூட், நிரோஷன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், மரியாம்பிள்ளை (முன்னாள் கத்தோலிக்க அச்சகம்), சிங்கராசா, செல்லம் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் செவ்வாய் காலை 9-00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. நீ. குலேந்திரன்.

சென் யூட் அவினியு,
முள்ளி வீதி, அரியாலை. (17328)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org